# முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்.
# Probate.OP.No. 151/2024

2026-ம் ஆண்டு ஜீன் மாதம் 22-ம் நாள் மனுதாரா் சாட்சியின் வாக்குமூலம். 1969-ம் வருடத்திய சாட்சிய சட்டம் பிரிவு 5-ன் ஏற்பாட்டின்படி திரு.சௌந்திரபாண்டி யன், பெஞ்ச கிளார்க் கிரேடு 1 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு, சமுத்திரம் | ஜாதி | : |
| த.பெ /க.பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| தாலுகா | : | வயது | : |

22.06.2026

P.W.2

<u>முதல் விசாரணை</u> :-

அசல் மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை எனக்குத் தெரியும். அசல் மனுவில் உள்ள விபரம் எனக்குத் தெரியும். எனனுடைய சாட்சியமாக நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். ஜெயராமன் என்பவரை எனக்கு பழக்கமானவர். பதிவு செய்யப்படாத உயில். அந்த உயிலில் நானும், ஜெயராமன், ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதில் நான் 2 வதாக கையொப்பம் செய்தேன். வைரமுத்து அம்மா கையொப்பம் செய்தார். மேற்படி மனுவில் உள்ள சொத்து பற்றி எனக்குத் தெரியும். மேற்படி உயிலில் உள்ள எனது கையொப்பம் **ம.சா.ஆ. 10** ஆகும். ஆதார்கார்டு நகல் **ம.சா.ஆ.11** ஆகும்.

**<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு பற்றிய விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான் .உயில் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் தனலட்சுமி அம்மாள் அவரது மகன் வைரமுத்துவிற்கு எழுதிக்கொடுத்தார். மேற்படி உயிலானது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 03.10.2023 அன்று எழுதப்பட்டது. தனலட்சுமி அம்மா தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயிலில் எந்த எந்த சொத்தினை எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சொத்து வீடும், காலிமனையும் ஆகும்.

**மறு விசாரணை – இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.